[1975 ஏப்ரல் 18

* 680. வினு—திரு. ந. முத்துவேல்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதியில் புதுக்குப்பம் கிராமத்திலுள்ள அரசினர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தென்னுர்க்காடு மாவட்டம், வானூர் தொகுதியில் புதுக்குப்பம் கிராமத்திலுள்ள, அரசினர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடமில்லே.

திரு. செ. அரங்கநாயகம்: ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலேவர்: கேள்வி நேரம் முடிந்து விட்டது என்று இன்னும் நான் சொல்லவில்லே. அதற்குள் பாய்ண்ட் ஆப் ஆர்டர் என்றுல் எப்படி?

வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

திரு. அரங்கநாயகம் அவர்கள் இப்பொழுது பேசலாம்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) தகவல் கோரல்

தாம் பேசிய பேச்சில் சில சொற்ருெடர்கள் நடவடிக்கைக் குறிப்பில் காணப்படாதது குறித்து.

திரு. செ. அரங்கநாயகம்: தலேவரவர்களே, இந்த மாமன்றத்தில் உறுப்பினர்கள் பேசுகின்ற பேச்சுக்கள் எல்லாம் பதிவு செய்யப்படு கின்றன. பத்திரிகையிலும் போடுகிருர்கள். அப்படி உறுப்பினர்கள் பேசுகின்றபோது தவருன அல்லது அன்பார்லமெண்டரி வார்த்தைகள் வந்திருந்தால் அவைகளே எக்ஸ்பஞ்ச் செய்துவிடுகிற காரணத்தால் அதைப் பத்திரிகைகளில் போடுவது இல்லே. ஆனுல் சில சமயங்களில் எக்ஸ்பஞ்ச் செய்யாத வார்த்தைகள் கூட ப்ரொசீடிங்சில் இல்லாமல் இருக்கின்றன. ஆனுல் அவைகளேப் பத்திரிகையில் போட்டுவிடு கிருர்கள். அப்படிப் போடுவதால் பத்திரிகைகளுக்குச் சில சமயங் களில் சங்கடங்கள் வருகின்றன. உதாரணத்திற்கு கல்வி மானியத்தில்

1975 ஏப்ரல் 18]

நான் பேசுகின்ற நேரத்தில் அமைச்சர்களுக்கு மட்டும் மானம் ரோஷம் உண்டு மற்றவர்களுக்கு இல்லையா என்று கேட்டிருந்தேன். பத்திரிகையில் அது வெளி வந்திருக்கிறது. ஆனால் அது ப்ரொசீடிங்சில் இல்லை. பேசுகின்ற நேரத்தில் அது எக்ஸ்பஞ்ச் செய்யப்படும் என்று சொல்லியிருந்தால் நான் வருத்தப்படப் போவது இல்லை. அல்லது என்னையே கேட்டிருந்தால் கூடத் திரும்ப பெற்றுக்கொண்டு இருப்பேன். இது பத்திரிகையில் வந்து விட்டது. ப்ரொசீடிங்சில் இல்லை. இது போன்ற சந்தர்ப்பங்களில் பத்திரிகைகளுக்குச் சங்கடங்கள் வந்து விடுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிவான உங்கள் உரையைத் திருத்த உங்களுக்குக் கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கிற நேரத்தில் ஏதாவது விடுபட்டு இருந்தால் அதை எழுதி அனுப்பலாம். அது தான் முறை.

(4) நடைமுறைக் கேள்விகள்

(அ) கவன ஈர்ப்பு அறிவிக்கைகளை எடுத்துக்கொள்வதில் ஏற்படும் காலதாமதம் குறித்து.

திரு. க. உரொ. எட்மண்ட்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய சட்டமன்ற 41-வது விதிமுறையின் கீழ் உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்து வருகிறோம். கவன ஈர்ப்புத் தீர்மானங்களை ஒத்திவைப்பு தீர்மானங்களைப் போன்று அவசர காரியங்களுக்காக உறுப்பினர்கள் கொண்டு வருகிறார்கள். என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் 19—2—75 அன்றைக்கு, அதாவது இரண்டு மாதத்திற்கு முன்னால் கொடுத்தார். 60 நாட்கள் முடிந்து விட்டன. நம்முடைய விவசாய அமைச்சர் மாண்புமிகு திரு. ஆதித்தனார் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கொடுத்து இருந்தார்கள். இன்னும் அவர் தன்னுடைய துறையிலிருந்து பதிலைப் பெற முடியவில்லை என்றால் அவர் அமைச்சர் வேலை பார்க்கிறாரா அல்லது . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லாம் வேண்டாம். பதில் வரவில்லை என்று சொல்லுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: இரண்டு மாதமாகிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் தன்னுடைய துறைக்கு வெளியே உள்ள காரியங்களை எல்லாம் வேகமாகப் பார்க்கிறார்.